# திருமறை திறவுகோல்

## Bible Keys

எழுதியவர் :

J.C. சோட் (USA)

வெளியிடுவோர் :

கிருபையுள்ள வார்த்தை, மதுரை.

# **BIBLE KEYS** (Tamil)

PART I : 1-10 Lessons

Copyright 2009 - Kirubaiyulla Varthai®

First Printing in Tamil : April 2009

Publisher : P.C. Philemon Rajah, M.A.,M.Th.,

(Director - J.C. School of Evangelism)

For Copies :

**J.C. SCHOOL OF EVANGELISM**

45 C/1 Church Lane, Coronation Street,

Arasaradi, Madurai - 625010.

Ph: 0452 - 2607026, Cell: 92 4421 4421

## ஆசிரியரிமிருந்து...



### முகவுரை

இந்த புத்தகச் செய்தி முதலாவதாக 1962-ல் பாகிஸ்தானிலுள்ள லாகூரில் எழுதப்பட்டு அச்சேற்றப்பட்டது. பின்பு கராச்சியில் முப்பது பாடங்கள் கொண்ட திருமறை அஞ்சல் பயிற்சிக்காக அச்சிடப்பட்டது. அடுத்த பல ஆண்டுகளாக பாகிஸ்தான் முழுவதும் பரவலாக இப்புத்தகம் பயன்படுத்தப்பட்டது.

"திருமறைத் திறவுகோல்கள் அஞ்சல் வழி பயிற்சி" என்று இது அழைக்கப்படக் காரணம், திருமறையின் உபதேசங்களின் சில திறவுகோல் கருத்துக்களை பயிற்சி பெறுவோருக்கு அளித்து, தேவனுடைய வசனத்திலும், கிறிஸ்துவினிடத்திலும், அவருடைய சபை மற்றும் இரட்சிப்பு ஆகியவைகளில் தேர்ச்சி பெறச் செய்யும் நோக்கில் எழுதப்பட்டது. புத்தக வடிவில் இது அளிக்கப்பட்டாலும், அஞ்சல் வழிக் கல்வியாக பயன்படுத்தவும் முடியும்.

ஆரம்பத்தில் வெளியிட்ட போது இருந்த அதே தேவை தற்போது உள்ளவர்களுக்கும் இருப்பதை உணர்ந்து, இப்பாடங்கள் அச்சடித்து வெளியிடப்படுகிறது. எனவே தயவு செய்து இந்தப் புத்தகத்தை வாசித்து, கவனமாய் வேதத்தின் போதனைகளாகிய வெளிச்சத்தில் கற்கும்படி வேண்டுகிறோம். அநேகருக்கு சத்தியமானது கொண்டு செல்லப்பட இப்பாடங்கள் உதவும் என்பதே ஆசிரியரின் ஜெபம்!

சத்தியமானது கொண்டு செல்லப்பட வேண்டுமென்பதே ஆசிரியரின் ஜெபம்!

மேலும் உங்களுக்கு நாங்கள் உதவக் கூடுமாகில் இப்புத்தகத்தில் உள்ள முகவரியில் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கெள்கிறோம்.

**ஜே.சி. சோட்**
***USA***

**அஞ்சல் வழி பாடமாக இப்புத்தகத்தை பயன்படுத்துவோருக்கு சில வழிகாட்டல்கள் :**

திருமறைத் திறவுகோல்களின் கேள்வித் தாள்கள் தனியே கிழித்து எடுக்கும்படி இணைக்கப்பட்டுள்ளன. கேள்விகளுக்கான பதில்களை நிரப்பி, திருமறை ஆசிரியருக்கு, திருத்தி மதிப்பிடும்படி அனுப்பி வைக்கப்பட வேண்டும். தயவு செய்து பதில்களை தெளிவாக எழுதவும்; அதேபோல் உங்கள் பெயர் மற்றும் முகவரியையும் ஒவ்வொரு பாடத்தின் விடைத் தாள்களிலும் எழுதினால் அது உங்களை அடையாளப்படுத்தி, திருத்தப்பட்டு மதிப்பெண்களுடன் உங்கள் பெயருக்கு அனுப்ப ஏதுவாகும்.

இப்பயிற்சி மூலமாக நீங்கள் பெரிதும் பயன் பெறுவீர்கள் என்று ஜெபித்து, பயிற்சி பெறும் உங்களை வாழ்த்துகிறோம். உங்களுக்கு பாடத்தைக் குறித்த கேள்விகளோ, சந்தேகங்களோ, மேற்கொண்டு விளக்கங்களோ தேவையாயின் உங்கள் பயிற்சித் தாள்களைத் திருத்துகிற ஆசிரியர்களை தயவு செய்து தயக்கமின்றி தொடர்பு கொள்ளுங்கள். திருமறையின் திருவார்த்தைகளை கற்றுக் கடைபிடிப்பதால் உண்டாகும் ஆசீர்வாதம் உங்கள் உள்ளத்திலும், இல்லத்திலும் நிலைத்திருப்பதாக.

# பொருளடக்கம்

பக்கம்

| | | |
|---|---|---|
| திறவுகோல் 1 | திருமறைக்கு முன்னுரை .... | 7 |
| திறவுகோல் 2 | தேவனும் அவருடைய சிருஷ்டிப்பும் ... | 10 |
| திறவுகோல் 3 | மோசேயின் பிரமாணம் ... | 13 |
| திறவுகோல் 4 | கிறிஸ்துவின் வருகை ... | 17 |
| திறவுகோல் 5 | சபையின் ஸ்தாபிதம் ... | 20 |
| திறவுகோல் 6 | சபையை விளக்கப்படுத்துதல் ... | 24 |
| திறவுகோல் 7 | சபையின் ஆளுகை அமைப்பு ... | 27 |
| திறவுகோல் 8 | சபையின் ஊழியம் ... | 30 |
| திறவுகோல் 9 | பெயர் (நாமம்) ... | 34 |
| திறவுகோல் 10 | கிறிஸ்துவின் சுவிசேஷம் ... | 38 |

அன்பிற்குரிய மாணவரே,

இப்பாடம் மொத்தம் 30 பாடங்களை கொண்ட தொகுப்பு ஆகும்.

முதலில் உங்களுக்கு 10 பாடங்கள் அனுப்பப்படுகிறது. இவைகளை கவனமாகப் படித்து, கேள்வி பதில் பகுதியை மட்டும் தனியே எடுத்து சரியான பதில்களை எழுதி உங்கள் தெளிவான முகவரியுடன் எங்களின் முகவரிக்கு எழுதி அனுப்பவும் பதிவு எண்ணை கவனமாக ஒவ்வொரு பாட கேள்வி –பதில் பகுதியிலும் எழுதி அனுப்புங்கள். உங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி.

இப்பாடங்களை உங்கள் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்களுக்கும் அறிமுகம் செய்து அவர்களையும் படிக்க வையுங்கள்.

"என்னிடத்தில் கேட்டு நிச்சயித்தவைகளை உண்மையுள்ள மனிதனிடம் ஒப்புவி" (2தீமோ.2:2) என்ற வசனத்தின்படி செயல்பட்டு தேவ கிருபையை திரளாக பெறுக என்று வாழ்த்துகிறேன்.

அன்புடன்,

**பிலேமோன் ராஜா**, M.A. M.Th

Director - J.C. School of Evangelism, Madurai.

# திருமறைக்கு முன்னுரை

திருமறையின் நேரடிப் பொருள் "புத்தகம்". உலகம் முழுவதிலும் இதுவே மகத்தான புத்தகம். உலகத்தின் விற்பனையில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. உண்மையில், இது அநேக புத்தகங்களின் இணைப்பு.

திருமறை இரண்டு பெரிய பிரிவுகளைக் கொண்டது, அவை **"பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு"** என்பன. அநேக ஆண்டுகளுக்கு முன்பாக பழைய ஏற்பாடு தேவனுடைய ஜனங்களுக்கு அவருடைய சித்தத்தை வெளிப்படுத்தும்படி கொடுக்கப்பட்ட பழைய பிரமாணமாகும். இயல்பாகவே, புதிய ஏற்பாடு பின்னதாகக் கொடுக்கப்பட்ட தேவனுடைய பிரமாணம் அல்லது முதல் பிரமாணத்திற்குப் பதிலாக கொடுக்கப்பட்ட அவருடைய சித்தம்.

திருமறை அறுபத்தி ஆறு புத்தகங்களை உள்ளடக்கியது. அதில் பழைய ஏற்பாட்டில் முப்பத்தி ஒன்பது (39) புத்தகங்களும், புதிய பிரிவில் இருபத்தி ஏழு (27) புத்தகங்களும் உள்ளன. பழைய ஏற்பாட்டை அநேக பகுதிகளாக பிரிக்கிறோம். முதலாவதாக *நியாயப் பிரமாணப் புத்தகங்கள் ஐந்து;* அவைகள் பஞ்சாகமம் என்றும் அழைக்கப்படுகின்றன. அவையாவன ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம். அடுத்ததாக *வரலாற்றுப் புத்தகங்கள் பன்னிரெண்டு*. அவை யோசுவா, நியாயாதிபதிகள், ரூத், 1சாமுவேல், 2சாமுவேல், 1இராஜாக்கள், 2இராஜாக்கள், 1நாளாகமம், 2நாளாகமம், எஸ்றா, நெகேமியா, எஸ்தர், ஆகிய புத்தகங்களைக் கொண்டுள்ளது. அடுத்து வருவது *ஐந்து* புத்தகங்களைக் கொண்ட *பாடல் புத்தகங்கள்* எனும் பகுதி; அவை யோபு, சங்கீதம், நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப்பாட்டு என்பன. எஞ்சியிருக்கும் **பதினேழு** புத்தகங்களும் ***தீர்க்கதரிசனங்களைக்*** கொண்டவை அவைகளும் கூட இரு பகுதிகளாக பகுக்கப்பட்டுள்ளன. முதலாவதாக ஐந்து புத்தகங்கள், பெரிய தீர்க்க தரிசனம். அவை ஏசாயா, எரேமியா, புலம்பல், எசேக்கியேல், தானியேல் என்பன. இரண்டாம் பகுதியில் ஓசியா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீகா, நாகூம், ஆபகூக், செப்பனியா, ஆகாய், சகரியா, மல்கியா ஆகிய பன்னிரண்டு புத்தகங்களைக் கொண்ட சிறிய தீர்க்க தரிசனங்களாகும்.

புதிய ஏற்பாடும் பகுதிகளாக அல்லது பிரிவுகளாக

பிரிக்கப்பட்டுள்ளது. முதல் நான்கு புத்தகங்களும் (இயேசு கிறிஸ்துவின்) வாழ்க்கை வரலாறுகளைக் கொண்ட மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் எனும் புத்தகங்களாகும். உள்ளடக்கியது. வரலாற்றைக் குறிக்கும் ஒரே புத்தகம் அப்போஸ்தலர் நடபடிகள். அடுத்து வருவது இருபத்தியொரு புத்தகங்களைக் கொண்ட, கிறிஸ்தவ வாழ்க்கையைக் குறித்து பேசும் நிருபங்களாகும். அவை ரோமரில் ஆரம்பித்து, தொடர்ந்து 1 கொரிந்தியர், 2 கொரிந்தியர், கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர், 1தெசலோனிக்கேயர், 2 தெசலோனிக்கேயர், 1தீமோத்தேயு, 2தீமோத்தேயு, தீத்து, பிலமோன், எபிரேயர், யாக்கோபு, 1 பேதுரு, 2 பேதுரு, 1யோவான், 2யோவான், 3யோவான், யூதா, ஆகியன. இறுதியாக தீர்க்கதரிசன புத்தகமாகிய வெளிப்படுத்தின விசேஷம் எனும் ஒரே புத்தகம்.

திருமறையை எழுதியது அநேக ஆசிரியர்களானாலும், அநேக ஆண்டுகளாக எழுதப்பட்டு வந்திருந்தும், அனைத்து புத்தகங்களிடையே ஒரு முழு ஒற்றுமையைக் காணக்கூடும். தன்னில் தானே திருமறை முரண்படுவதில்லை. ஒரு ஆசிரியர் ஒன்றை எழுதியிருக்க, மற்றொருவர் அதற்கு எதிராக ஒரு போதும் எழுதவில்லை. எனவே தேவனால் ஏவப்பட்டு, எழுதப்பட்டதற்கு இது ஒரு ஆதாரம். இப்படிப்பட்டதொரு பெருமை வேறெந்த புத்தகம் தன்னகத்தே கொண்டுள்ளது.?

உலகத்தோற்றத்தின் ஆரம்பக் காரியங்களையும், மனிதனின் சிருஷ்டிப்பையும், அவன் உலகில் வாழ்வதன் நோக்கத்தையும், மரணத்திற்குப் பின் அவன் எங்கே போகிறான் என்பதையும் குறித்து பேசுகிற ஒரே புத்தகம் திருமறை. இந்த பெரிய புத்தகம் மனிதனைக் குறித்து நல்ல விசேஷத் தன்மைகளை மாத்திரமல்ல, தவறுகளையும் சுட்டிக் காட்டுகிறது.

இப்புத்தகத்தின் மூலம் கடந்த கால வரலாற்றையும், நிகழ்காலத்தில் நம்மிடத்தில் எதிர்பார்க்கப்படுவது என்ன என்பதையும், எதிர்கால சம்பவங்களை காண தேவையான காரியங்களையும் கற்றுக் கொள்கிறோம். இதில் அடங்கியுள்ள அநேக தீர்க்க தரிசனங்களும் நிறைவேறியுள்ளன. அதிலே கூறப்பட்டுள்ள அநேக வாக்குத்தத்தங்கள் நிறைவேறியுள்ளது. எதிர்கால சோதனைகளையும் இப்புத்தகம் தாங்கி நிற்கும் என்பதில் சந்தேகமும் உண்டோ?

தேவன் இந்த திருமறை மூலமாகத்தான் பேசுகிறார். இதன் மூலம் குமாரனின் வருகையையும் தமது சித்தத்தையும் வெளிப்படுத்தினார். சபையின் ஆரம்பத்தையும் வளர்ச்சியையும் குறித்தும் இது பேசுகிறது. இதன்கட்டளைகளுக்கு கீழ்படிகிறவர்களுக்கு வெற்றியுள்ள ஜீவியத்தையும் உறுதியளிக்கிறது.

திருமறையைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் வெகுகாலத்துக்கு முன்பாகவே "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியை படிப்பிக்கிறதற்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" (2தீமோத்தேயு 3:16,17) இப்படியாக, அவை அனைத்தும் தேவனால் அருளப்பட்டதும், தேவனிடத்திலிருந்து வந்ததும், தேவனுடைய வசனமுமாயிருப்பதால், நற்கிரியை செய்யத்தக்கதாக மனுஷனை தகுதியுள்ளவனாகவும் மாற்றுகிறது.

கிறிஸ்து, வேத வசனங்களை சத்தியம் என்றும், சத்தியமே ஒருவனை விடுதலையாக்கும் என்றும் பேசினார் (யோவான் 8:32; 17:17). பேதுரு குறிப்பிடுகையில் தேவனுடைய வாக்கியங்களின்படியே ஒருவன் போதிக்க வேண்டும் என்றார்.

அதாவது திருமறையின் உபதேசத்திற்கு இணைந்து பேச வேண்டும் என்றார் (1பேதுரு 4:11). மீண்டும் பவுல், நாம் திருமறையை படிக்க வேண்டும் என்றும்; கிறிஸ்து, வசனங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்றும் குறிப்பிட்டனர் (2தீமோத்தேயு 2:15;யோவான்5:39). இறுதியாக, ஆனால் அற்பமாக அல்ல, வசனத்தோடே ஒன்றைக் கூட்டவோ குறைக்கவோ கூடாது என்று எச்சரிக்கப்படுகிறோம் (வெளி. 22:18,19).

ஆம், திருமறைதான் உலகத்திலேயே பெரிதும் மேன்மையான புத்தகம். நீங்கள் கீழ்படிந்தால் அதன் ஆசீர்வாதங்கள் உங்களுக்கு உண்டு. அல்லது நீங்கள் புறக்கணித்தாலோ, எதிர்த்தாலோ சாபத்தைப் பெறுவீர்கள். அதிலுள்ளவைகளை படியுங்கள், அதற்கு கீழ்படியுங்கள்; அது உங்களுக்கு இம்மையிலும், மறுமையிலும் ஆசீர்வாதமாயிருப்பதை நிரூபிக்கும்.

# தேவனும் சிருஷ்டிப்பும்

**(ஆதியாகம் 1,2 அதி)**

திருமறை, "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" என்று துவங்குகிறது (ஆதியாகமம் 1:1) இந்த இடத்திலோ, அல்லது திருமறையில் வேறு எங்காகிலுமோ, தேவன் ஒருவர் இருக்கிறார், அவர் எல்லாவற்றையும் உண்டாக்கினார் என்று நிரூபிக்க முயற்சிக்கப்படவில்லை. ஏற்கனவே இவைகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையைப் போல் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மனிதன் தன்னுடைய பகுத்தறிவினால், உண்டாக்கப்பட்ட ஒவ்வொன்றின் பின்னணியிலும் ஏதோ ஒரு மேலான சக்தி இருப்பதாக நினைப்பதில் ஆச்சரியப்படத்தக்க காரியம் எதுவுமில்லை. அந்த மேலான சக்தி தேவன்.

ஆதியாகமம் புத்தகத்தில் எப்படி அனைத்து பொருள்களும் உண்டாக்கப்பட்டன என்பதையும், அவைகள் என்ன வரிசையில் சிருஷ்டிக்கப்பட்டன என்பதையும் குறித்த முழு விளக்கமளிக்கப்படுகிறது. பூமி உருவாக்கப்பட்ட பின் எவ்வளவு காலம் கழித்து மிருக ஜீவன்களும் மனித ஜீவன்களும் உண்டாக்கப்பட்டு தேவன் ஒருவர் உண்டென்கிற அறிவு வந்தது என்று நாம் அறிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. இந்த விஷயத்தைப் பொருத்தமட்டில், சிருஷ்டிப்புகள் அனைத்தும் கர்த்தருடைய செய்கை என்று நம்ப வைக்க அநேக விஷயங்களை நாம் அறிய வேண்டிய அவசியமில்லை. ஆகிலும் ஆதியாகமம் 1 மற்றும் 2–ம் அதிகாரங்களின் முழு வரலாறையும் வாசியுங்கள் உண்மையில் என்ன நடந்தது என்பதைக் கூறுகிற ஒரே பதிவேடு இதுதான்.

தேவனுடைய எல்லா சிருஷ்டிப்புகளுக்கும் மேலாக மனிதனையே தேவன் மேன்மையாக வைத்தார் என்பதைக் கவனியுங்கள். குகள் இருந்தபோதிலும், அவைகள் அடக்கப்பட்டு பணிந்து கீழ்படியத்தக்க வகையில் பழக்கப்படுத்தப்படுகின்றன. அனைத்தும் மனிதனுக்குப் பயப்படுகின்றன.

ஒருவன் ஏன் தேவனை விசுவாசிக்க வேண்டும் என்பதற்கு அநேக காரணங்கள் உண்டு. முதலாவதாக, இயற்கை தேவன் ஒருவர் உண்டு என்பதைச் சாட்சியிடுகின்றது. உங்களைச் சுற்றிலும் கவனியுங்கள். தேவன் படைத்த யாவும் தேவனுடைய நியமத்தின்

படியான இயற்கை விதிகளின்படி தவறாமல் செயலாற்றிக் கொண்டுள்ளன, என்பதை பாருங்கள். ஒருவேளை உங்கள் மாம்ச கண்களால் தேவனைக் காணமுடியவில்லை என்பதற்காக, தேவன் இருக்கிறார் என விசுவாசிக்க முடியவில்லை என வாதிடலாம். ஆகிலும் அவருடைய கிரியைகளை நீங்கள் காண்கிறீர்கள். உங்களுக்கு மூளை இருப்பதை என்னால் காண இயலவில்லை, ஆகிலும் உங்களுடைய செயல்களைக் கொண்டு உங்களுக்கு மூளை இருப்பதைக் காண்கிறேன். எனது கடிகாரத்தைக் கண்ணுறும் போது அதை உண்டாக்கினவரை எண்ணால் பார்க்க இயலவில்லை; ஆகிலும் யாரோ ஒருவர் அதைச் செய்திருக்கிறார் என்பதை நான் விசுவாசிக்கிறேன். உண்டாக்கப்பட்டவைகள் எவ்வளவாய் நிலைநிற்கிறதோ அவ்வளவாய் யாரோ ஒருவர் உண்டாக்கியிருப்பதும் உறுதியாகக் காணுகிறது. நீங்கள் உங்கள் கண்களால் பார்க்கவில்லை என்பதற்காக, அவைகள் இல்லை என்று நிரூபணமாகாது. உலக முழுவதிலும் உள்ள அனைத்து காரியங்களுக்கும் தேவனே மூளையாக, ஜீவனாக இருக்கிறார்.

அழகிய மலர்களையும், வானங்களையும், புதிதாய்ப் பிறந்துள்ள குழந்தையையும் பாருங்கள். சர்வ வல்லமையும் நித்தியமுமான ஒரு சக்தியிருப்பதை, நீங்கள் விசுவாசிப்பதை எப்படித் தவிர்க்க இயலும். "**வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது.**" என்று தாவீது சொன்னார் (சங்கீதம் 19:1)

திருமறை போதிப்பதால், தேவன் ஒருவர் இருக்கிறார். மேலும் திருமறை முழுவதும் தேவன் நிறைந்திருக்கிறார். அவர் ஆவியாக இருக்கிறார் என வேதாகமம் சொல்லுகிறது; அவர் வல்லமையுள்ளவரும், அனைத்தையும் அறிந்தவரும், நித்திய நித்தியமாய் இருக்கிறவருமாயிருக்கிறவர் என்றும் திருமறை சொல்லுகிறது.

ஆக தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதே தர்க்கரீதியான முடிவாக இருக்க முடியும். தேவன் இல்லையென்று சொல்லுவது உண்மையில் தேவன் இருப்பதை வலியுறுத்துகிறது. தேவன் இல்லையென்று சொல்லும் போதெல்லாம் அவர் இருக்கிறார் என்றே எனக்குள் சொல்லுகிறேன். தேவன் இல்லை என்று சொல்லுவது, அசாத்தியமான முறையில் உண்டாக்கப்பட்டுள்ள இவ்வுலகம்,

உண்டாக்கிய ஒருவர் இல்லாமலேயே உருவாயிற்று என்பதாகும். அப்படிச் சொல்லுவது, ஒரு வீட்டைச் சுட்டிக் காட்டி யாரும் கட்டாமலேயே திடீரென்று ஒரு நாள் அந்த வீடு இருந்தது என்று சொல்லுவதற்கு ஒப்பானது.

நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அனைத்து ஜீவராசிகளும் ஒரே நிலையில் நிலைத்திருக்கிறது என்பதைக் கண்ணுறும் போது, பரிணாமத்தின் வளர்ச்சியினாலேயே அனைத்தும் வந்ததாக கூறுவது எப்படி? சில வருடங்களுக்கு முன் நான் கெய்ரோ சென்றிருந்தபோது, அங்கிருந்த அரும்பொருட் காட்சியகத்தை சுற்றிப்பார்த்தேன். அங்கே உடல் கெடாமல் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள குரங்குகளையும், நாய்களையும் கண்டேன். இப்பொழுது காணப்படும் நாய்களுக்கும், குரங்குகளுக்கும், 5000 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த இப்பிராணிகளுக்கும் எவ்வித வித்தாயாசமும் காணப்படவில்லை. அநேகருடைய கருத்துப்படி அனைத்து குரங்குகளும் பரிணாமம் பெற்று மனிதர்களாயிருக்க வேண்டும், அல்லது அனைத்தும் பரிணாம வளர்ச்சியினால் வேறொரு உயர்ரக ஜீவராசிகளாகியிருக்க வேண்டும். ஆதலால் ஒரு குரங்கு கூட இன்று உலகில் இருந்திருக்கக் கூடாது. அப்படியானல் மனிதனைப் பற்றி என்னவென்பது?

எனவே, தத்துவக் கோட்பாடுகளைச் சாராமல் உண்மை நிகழ்ச்சிகளைச் சார்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியத்தை நீங்களே பாருங்கள். தேவன் இல்லையென்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்கிறான், என்று சங்கீதக்காரன் குறிப்பிட்டான். (சங்கீதம் 14:1)

அனைத்து ஆசீர்வாதங்களையும் கொடுக்கிறவர் என்று யாக்கோபு குறிப்பிட்ட பரலோகத்தின் தேவன் இவரே. (யாக்கோபு 1:1) தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை கொடுக்கும் அளவுக்கு உலகத்தில் அன்புகூர்ந்தார் என்றார் யோவான் (யோவான் 3:16). எனவே, திரும்பிய பக்கமெல்லாம் கர்த்தரையும், அவரது கிரியைகளையும், ஆசீர்வாதங்களையும், அவரது இரக்கத்தையும் மனிதன் மீது பொழியப்பட்டிருப்பதை நீங்கள் பார்க்கலாம். உண்மையிலேயே அவர் இருக்கிறார். இதனை அவருடைய படைப்புகளும், வேதாகமமும் உறுதிப்படுத்துகிறது.

## மோசேயின் சட்டம்

மனிதன் ஆரம்பத்தில் பரிபூரணப் பட்டவனாகத்தான் இருந்திருக்கிறான். ஆனால், அவனது கீழ்படியாமையினாலே வீழ்ச்சியடைந்து, பரதீசிலிருந்து வெளியேற்றப்பட்டான் (ஆதி.2:3). பின்னதாக, ஜலப்பிரளயத்தை அனுப்பி மனிதனை அழிக்கத் தீர்மானித்தார். நோவாவும் அவனுடைய குடும்பமும் நீதிமான்களாயிருந்ததால் அவர்களை பாதுகாத்தார். (ஆதி. 6:7)

ஜலப்பிரளயத்துக்குப் பின்பு சில காலம் கழித்து தேவன் ஆபிரகாமைத் தெரிந்து கெண்டு அவர் மூலமாக ஒரு பலமான தேசத்து மக்களை உருவாக்கத் தீர்மானித்தார். எப்படியிருப்பினும், அவனுடைய சந்ததியார்களாகிய இஸ்ரவேலர்கள் முடிவில் எகிப்தின் அடிமைத்தனத்தில் இருப்பதை உணர்ந்தார்கள். இந்த நேரத்தில் தான் அவர்களை விடுதலையாக்கி வழிநடத்திச் செல்ல மோசே வருகிறார். அநேக சந்ததிகளின் அடிமைத்தனத்திற்குப் பிறகு தேவனுடைய உதவியினால் எகிப்தைவிட்டுப் புறப்பட்டார்கள். அங்கிருந்து சீனாய் மலைக்குப் போய் தேவனுடைய பிரசன்னத்தினால் ஒரு பிரமாணத்தைப் பெற்றனர். அதுவே மோசேயின் நியாயப்பிரமாணம் என்று அழைக்கப்படுகிறது. (யாத். 19:20)

குறிப்பு: கட்டளைகள் முழுக்க முழுக்க இஸ்ரவேலர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்டவை என்பதைக் கவனித்து மனதில் வைக்க வேண்டும். புறதேசத்தாருக்கு அவைகள் கொடுக்கப்படவில்லை; கொடுக்கும் எண்ணமும் இருக்கவில்லை. அவர்களை நியாயப்பிரமாணத்துக்குட்படுத்த வேண்டுமானால் அவர்கள் யூதமார்க்கத்து அமைந்தவர்களாக மாறி யூதனாக்கப்படவேண்டும்.

இந்தப்பிரமாணம் ஏன் கொடுக்கப்பட்டது? பவுல் அநேக ஆண்டுகளுக்குப் பின்பு, "**அப்படியானால் நியாயப் பிரமாணத்தின் நோக்கமென்ன? வாக்குத்தத்தத்தைப் பெற்ற சந்ததி வருமளவும் அது அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு தேவ தூதரைக் கொண்டு**

**மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது**" என்றார் (கலா. 3:19). நியாயப் பிரமாணம் கொடுக்கப்பட்டதன் நோக்கம் என்ன என்பதை இப்பொழுது பாருங்கள். அக்கிரமங்களினிமித்தம் கொடுக்கப்பட்டது. இன்னொரு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், குறிப்பிட்ட காலம் வரும்வரைக்கும் ஜனங்கள் பின்பற்றும் படி கர்த்தர் தமது மக்களுக்கு கொடுத்தார். எவ்வளவு காலம்? சந்ததி வருமளவும்; யார் அந்த சந்ததி? கிறிஸ்து. கலாத்தியர் 3:29ல் பவுல் தொடர்ந்து "**நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்,**" என்று எழுதுகிறார்.

**நியாயப்பிரமாணத்திலுள்ளவைகளெல்லாம் நிறைவேறுமளவும் அதின் ஒரு எழுத்தாகிலும், எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போவதில்லை** என்று கிறிஸ்து குறிப்பிட்டார் (மத். 5:17,18). பிற்பாடு அவர், "**அவர்களை நோக்கி மோசேயின் நியாயப் பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேற வேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக் கொண்டு வந்த உபதேசங்கள் இவைகளே என்றார்**" (லூக். 24:44) எல்லாம் நிறைவேறியதா? சிலுவையில் தொங்கும் போது கூட "**எல்லாம் முடிந்தது**" என்று அவர் சொன்னார். பவுல் தொடர்ந்து, "**நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராக படிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து...** என்று சொல்லுகிறார் (கொலோ. 2:14)

மோசே மூலமாய் ஒரு காலத்தில் பேசின தேவன், இப்போது தமது குமாரன் இயேசு கிறிஸ்து மூலமாய் பேசுகிறார் என்று திருமறை கூறுகிறது. "**பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும், வகை வகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாய் பிதாக்களுக்குத் திருவுளம்**

**பற்றின தேவன், இந்த கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்** (எபி. 1:1,2) மறுரூபக் காட்சியில் தேவன் கிறிஸ்துவைக் குறித்து, மோசேயும் அங்கே தோற்றமளித்திருந்த போதிலும் " ***இவர் என்னுடைய நேசக் குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்; இவருக்குச் செவி கொடுங்கள்*** " என்று குறிப்பிட்டார், (மத். 17:5) தேவன் யாருக்குச் செவிசாய்க்கும்படி கூறினார்? மோசேக்கா? இல்லை. யோவான் ஸ்நானகனுக்கா? இல்லை. தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்கே.

மீண்டும் எபிரேய எழுத்தாளர், குறிப்பிட்டு, பழைய உடன் படிக்கை அல்லது ஏற்பாடு எப்படி எடுக்கப்பட்டு, புதிய ஏற்பாடு அதற்குப் பதிலாக வைக்கப்பட்டது என்பதை தெளிவாக்குகிறார் (எபி. 10). இனி நாம் மோசேயின் நியாயப்பிரமாணத்துக்கு கீழ்பட்டிராமல் கிறிஸ்துவின் மூலம் வரும் கிருபைக்கு கீழ்பட்டிருக்கிறோம் (யோவா. 1:17). மிருக பலி முறைமைகளை கேட்கும் பிரமாணத்திற்கு நாம் கட்டுப் பட்டிராமல், ஒரே முறையாக செலுத்ததப்பட்ட கிறிஸ்துவின் இரத்தத்தினால் முத்தரிக்கப் பட்டிருக்கிறோம் (எபி. 9).

இன்று அநேகர் மோசேயின் நியாயப் பிரமாணத்தை விசேஷமாய் பத்துக்கட்டளைகளை கைகொள்ள விரும்புகின்றனர். அவை கொடுக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்ற உதவியது, ஆகிலும் அது எடுக்கப்பட்டு கிறிஸ்துவின் பிரமாணமாகிய புதியதும் சிறந்ததுமான பிரமாணம் அந்த இடத்தை நிரப்பியது. பூரணப்பட்ட ஒன்றை விட்டு விட்டு, பூரணப்படாத பிரமாணத்துக்கு ஒருவர் ஏன் திரும்பிப் போக வேண்டும்? பழைய பிரமாணம் ஒருவரையும் இரட்சிக்கவில்லை. அப்படி இரட்சித்திருக்குமானால் அது எடுபட்டு போக வேண்டிய அவசியமில்லையே. மீண்டும் கேட்கிறேன், கிறிஸ்துவின் இரத்தத்தை விடுத்து மிருகபலிகளுக்கு ஏன் திரும்ப வேண்டும்?

எனவே திருமறையை அறியாத மனிதனே மோசேயின் பிரமாணத்திற்கு திரும்புவான். ஒரே நேரத்தில் (ஒன்றுக்கொன்று முரணான) இரண்டு கட்டளைகளை கைகொள்ள மதியீனனே பிரயாசப்படுவான். இருவேறுபட்ட நாடுகளின் ஒன்றுக் கொன்று முரணாக அமைந்த இருவேறு சட்ட திட்டங்களை ஒரே நேரத்தில் கைகொள்ள முயற்சிப்பது போன்றது இது.

ஞானமுள்ளவன் பழங்கதைகளான பிரமாணத்தை விட்டு விட்டு தேவனுடைய அபிஷேகம் செய்யப்பட்ட நிகழ்கால பிரமாணங்களின் ஆளுகையை ஏற்றுக் கொள்வான். வசனங்களைக் கற்கும் போது பத்துக்கட்டளைகளை அப்படியே புதிய பிரமாணத்தில் சேர்க்காமல், ஒரே ஒரு பிரமாணத்தைத் தவிர மற்ற அனைத்துப் பிரமாணங்களும், புதிய பிரமாணத்திற்கு (உட்பட்டு) இசைந்து போகக் கூடியவைகளாய் இருக்கின்றன. தவிர்க்கப்பட்ட அந்தப் பிரமாணம் ஓய்வுநாள் ஆசரிப்பைக் குறித்ததாகும். மற்ற ஒன்பது கட்டளைகளும் தேவனுடைய சத்தியங்களாயிருப்பதால் மனிதர்களை இதுவரை கட்டுப்படுத்தியது, இனியும் கட்டுப்படுத்தும், உதாரணமாக, ஒரு அரசாங்கம் பழைய சட்டதிட்டங்களை நீக்கி புதிய சட்ட அமைப்பை உருவாக்க முயலும் போது பழைய சட்டங்களிலும் பொருத்தமானவைகளை உட்படுத்திக்கொள்ளும். அந்த புதிய சட்டங்களுக்கு முழுமையாய் தன்னை ஒருவன் கீழ்படுத்தினாலும், தான் பழைய அரசு சட்டத்திற்கு கீழானவன் என்று சொல்லமாட்டான். மோசேயின் பிரமாணம் இஸ்ரவேலருக்கென்று கொடுக்கப்பட்டது, ஆனால் கிறிஸ்துவின் பிரமாணமோ கீழ்படிகிற யாவருக்கும் வெளிப்படையாக வைக்கப்பட்டுள்ளது. எல்லாரும் வந்து இளைப்பாறுதல் அடையும்படி கிறிஸ்து அழைக்கிறார். இப்படியாக நியாயப் பிரமாணம் மாற்றப்பட்டது.

# கிறிஸ்துவின் வருகை

(லூக்கா 1–4; யோவான் 1; யோவான் 18–21)

இயேசு கிறிஸ்து "ஆதியிலே" தேவனிடத்தில் இருந்தார். தேவனுடைய இந்த வாக்கியம், மனிதனை சிருஷ்டித்த விஷயத்தில் தெளிவாய் காணுகிறது. "பின்பு தேவன் நமது சாயலாகவும் நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின் மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார், "(ஆதியாகமம் 1:26)

மனிதன் பாவஞ்செய்து பரதீசிலிருந்து வெளியேற்றப்பட்டபின், அவனுக்கு ஒரு மீட்பர் அவசியமாயிற்று. இப்படியாக கிறிஸ்துவே அந்த மீட்பர் எனும் முதல் வாக்குத்தத்தை நாம் வாசிக்கிறோம். சர்ப்பத்தினிடத்தில் தேவன், "உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்", (ஆதியாகமம் 3:15).

பின்னர் கர்த்தர் ஆபிரகாமுக்கு வாக்களித்து, அவருடைய சந்ததிக்குள் (வித்துக்குள்) சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றார் (ஆதியாகமம் 12:1–3). கிறிஸ்துவே இந்த வாக்குத்தத்தின் படியான நிறைவேற்றம் (கலாத்தியர் 3:26,29). இந்த வாக்குத்தத்தமானது சந்ததிகள் தோறும் மறுபடியும் மறுபடியும் திரும்பத்திரும்பச் சொல்லப்பட்டது. தேவன் தமது வாக்குறுதியைக் காப்பாற்றினார்.

கிறிஸ்து வரப்போகிறார் என்கிற தீர்க்கதரிசனமும் உரைக்கப்பட்டது. உதாரணமாக, ஏசாயா "எங்கள் மூலமாய் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது? இளங்கிளையைப் போலவும், வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப் போலவும் அவனுக்கு முன்பாக எழும்புகிறார்; அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை, அவரைப் பார்க்கும் போது, நாம் விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது. அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும் பாடு அனுபவித்தவருமாயிருந்தார்; அவரை விட்டு நம்முடைய முகங்களை மறைத்துக் கொண்டோம்; அவர் அசட்டை பண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம்,"

(ஏசாயா 53:1–3). ஏசாயா 53ம் அதிகாரம், வரப்போதும் மீட்டரை பற்றி கூறுகிறது. உண்மையில், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களை வாசிப்பதினால், ஆண்டவரின் முழு வாழ்க்கை வரலாறையும் ஒருவர் அறிந்து கொள்ளக்கூடும் என்பதுதான் உண்மை. அவர் கிறிஸ்துவின் பிறப்பையும், அவருடைய குழந்தைப் பருவத்தையும், அவருடைய ஊழியத்தையும், அவருடைய மரணத்தையும், அவருடைய அடக்கம் பண்ணப்படுதலையும், அவருடைய உயிர்த்தெழுதலையும் அறிந்து வாசிக்க இயலும். பழைய ஏற்பாட்டை வாசித்ததின் மூலமாகத்தான் எத்தியோப்பியா மந்திரி போன்றவர்கள் கிறிஸ்துவை அறிந்து கொண்டனர் (அப்போஸ்தலர் 8:29–40)

இறுதியாக, நாம் மத்தேயு 1:18க்கு திரும்புவோமானால், பின்வரும் வார்த்தைகள் கூறப்படுகிறது. "இயேசு கிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது..." என்று துவங்குகிறது. மேலும் எப்படி கிறிஸ்து இந்த உலகத்தில் பிறந்தார் என்ற வரலாறும் நமக்குக் காணப்படுகிறது. சில உண்மைகளை கவனியுங்கள்.

1. அவர் கன்னிகையாகிய மரியாளிடத்தில் பிறந்தார் (மத்தேயு 1:23)

2. அவர் இயேசு என்று அழைக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. (மத். 1:21)

3. அவர் தமது ஜனங்களின் பாவங்களிலிருந்து அவர்களை மீட்டு இரட்சிப்பார் (மத். 1:21)

**கர்த்தருடைய வருகையோடு சம்பந்தப்பட்ட அநேக உண்மைகள் சுருக்கமாக பட்டியலிடப்பட்டுள்ளது. அவற்றில் சில:**

1. யோவான் (ஸ்நானகன்) கிறிஸ்துவுக்கு முன்னோடியாக வந்தான். அவன் கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்தினான் (யோவான் 1:6, 15; லூக்கா 7:24, 28).

2. கிறிஸ்து பெத்லகேமிலே பிறந்தார், ஆனால் நாசரேத்திலே வளர்ந்தார் (லூக்கா 2:1; மத். 2:19)

3. தமது நாட்களில் ஏனைய சிறுவர்களைப் போலவே அவரும் வளர்ந்தார் (லூக்கா 3:51,52)

4. அவர் ஏறத்தாழ தமது முப்பதாவது வயதில் தமது பொதுவான ஊழியத்தைச் செய்தார் (லூக்கா 2:21,23)

5. மற்றவர்களுக்கு முன் மாதிரியாக ஞானஸ்நானமும் பெற்றார் (மத். 3:13,17)

6. அவர் பன்னிரெண்டு அப்போஸ்தலர்களைத் தெரிந்து கொண்டார் (மத். 10:24)
7. அவர் நியாயப்பிரமாணத்தை அழிக்க வராமல், அதை நிறைவேற்றவே வந்தார் (மத். 5:17,18)
8. அவர் பிசாசினால் சோதிக்கப்பட்டார் (மாற்கு 1:13)
9. மறுரூபமானார் (லூக்கா 9:28)
10. அநேக அற்புதங்களை அவர் செய்தார் (யோவான் 2:1; 4:1;லூக்கா 8)
11. உவமைகளைக் கொண்டு போதித்தார் (மத்தேயு 13:25; லூக்கா 13)
12. அவரைச் சார்ந்த ஒருவனே அவரைக் காட்டிக் கொடுத்தான் (மத்தேயு26:47; யோவான் 18:2)
13. தவறான முறையில் விசாரிக்கப்பட்டார் (லூக்கா 23; யோவான் 19)
14. பாவமில்லாதிருந்தும், உலகத்தின் பாவங்களுக்காக மரித்தார் (ரோமர் 5:6–8)
15. அவர் அடக்கம் பண்ணப்பட்டு, மூன்று நாட்கள் கழித்து உயிர்த்தெழுந்தார் (மத்தேயு 26:28; யோவான் 19:20)
16. பிரதானக் கட்டளையை கொடுத்தபின் பிதாவினிடத்தில் பரமேறிப் போனார். (மத். 28:19; மாற்கு 16:15;16; அப். 1)

யோவான், "**தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவனெவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி; இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்**" (யோவான் 3:16).

தேவன் இப்படியாக, கிறிஸ்துவின் வருகையையும் அவரது வாழ்க்கை வரலாறும் குறித்த அனைத்துத் தீர்க்க தரிசனங்களையும் நிறைவேற்றினார். இவைகள் அனைத்தும் பதவு செய்யப்பட்டு, நாம் அனைவரும் விசுவாசிக்கும் படியாகவும், ஆசீர்வதிக்கப்படும் படியாகவும் எழுதப்பட்டுள்ளன (யோவான் 20:30,31)

கிறிஸ்து அல்பாவும், ஓமேகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறார் என்று திருமறை போதிக்கிறது. அதே போல, தேவாதி தேவன் என்றும், கர்த்தாதி கர்த்தா என்றும் பேசப்படுகிறார். (வெளி.19:11–16) பூமியிலே வாழ்ந்தவர்களிலேயே மிகப்பெரிய மகானாவார்,

ஆகிலும், அவர் மனிதர்களில் ஒருவராக இருக்கவில்லை, அவர் தேவனுடைய குமாரனாக இருந்தார் (மத். 17:5) அவர் உலகத்தின் இரட்சகர். அவர் எல்லாவற்றிலும் எல்லாமாயிருக்கிறார். உண்மையில் அவர் இருக்கிறார்.

# சபையின் ஸ்தாபிதம்

சபை என்பது அழைக்கப்பட்டவர்களின் கூட்டம் அல்லது ஒரு விசேஷித்த நோக்கத்திற்கென்று பிரித்தெடுக்கப்பட்டவர்களின் கூட்டம் என்று பொருள்படும். கிறிஸ்துவுக்குள் விசுவாசம் கொண்டு அவருடைய சித்தத்தின்படியும் போதனையின்படியும் பின்பற்ற தீர்மானித்த ஒரு மக்கள் கூட்டத் தொகுப்பே கிறிஸ்துவின் சபை.

சபை ஸ்தாபிதம் பெறுவதற்கு அநேக ஆண்டுகளுக்கு முன்பாக ஏசாயா, யோவேல், தானியேல் போன்றவர்கள் அதன் ஸ்தாபிதம் குறித்தும், அது எங்கே ஸ்தாபிக்கப்படும், யார் ஸ்தாபிதம் செய்வார், அது எப்போது ஸ்தாபிக்கப்படும், அது ஸ்தாபிதம் பெறுவதன் நோக்கம் ஆகியவற்றை முன்னுரைத்தனர். ஏசாயா, "**கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து, நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவருடைய பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும் எருசலேமிலிருந்து கர்த்தருடைய வசனமும் வெளிப்படும்**" என்று சொன்னார். (ஏசாயா 2:2,3)

யோவேலும், "**அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர் மேலும் ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்**" என்று எழுதினார் (யோவேல் 2:28, 29) தானியேல், பின்வரும் வாக்கியத்தை சொன்னார். அது, "**அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு இராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்; ...**" என்பதாகும் (தானியேல் 2:44)

இன்னும் அநேக தீர்க்கதரிசனங்களைப் பயன்படுத்தலாம். ஆகிலும் நாம் இப்பொழுது கிறிஸ்துவின் நாட்களுக்கு கடந்து போய், சபை ஸ்தாபிதம் குறித்து கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறவைகளைக் காண்போம். கிறிஸ்து, "**மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை**" என்றுச் சொன்னார் (மத்தேயு 16:18) அவர் இதைக் கூறும் போது சபை ஸ்தாபிதம் பெற்றிருக்கவில்லை; இன்னும் எதிர்கலத்தில் ஸ்தாபிக்க இருப்பதாகக் கர்த்தர் கூறினார். அதாவது, இந்த வார்த்தைகளைச் சொல்லி சில காலம் கழித்து அது ஸ்தாபிக்கப்படும். பேதுரு, அவரை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்தபின், அவர், "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான். மாம்சமும், இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை பரலோகத்திலிருக்கிற பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்," என்றார் (மத்தேயு 16:17). பேதுரு செய்த அறிக்கையின் மீது தமது சபையைக் கட்டுவதாக அவர் பேதுருவினிடத்தில் சொல்லுகிறார். அந்த அறிக்கை என்ன? இயேசு **தேவனுடைய குமாரன்** என்பதே. எனவே அவர் (பேதுரு) செய்த அறிக்கையின் மீது சபை கட்டப்படவிருந்தது; பேதுருவின் மேலேயே அல்ல. மேலும் கவனியுங்கள், சபையை யார் கட்டுவதாகக் கூறப்பட்டது? "நான் என் சபையைக் கட்டுவேன்" என்று கிறிஸ்து குறிப்பிட்டார். ஆகவே அது கிறிஸ்துவின் சபையாயிற்று. மனிதனால் கட்டப்பட்டு, மனித பெயரைத் தரித்துக் கொள்ளும் சபையல்ல; கிறிஸ்துவுக்கே உரியதும், கிறிஸ்துவின் பெயரைத் தரித்துக் கொள்ளக் கூடியதுமாகும்.

மாற்கு 9:1–ல் அவர், "... இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசி பார்ப்பதில்லையென்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்

என்றார்" (மாற்கு 9:1) இங்கே, கர்த்தர் ராஜ்யத்தைக் குறித்து அல்லது சபையைக் குறித்து செய்கிற வாக்குத்தத்தத்தையும், இரண்டும் ஒன்று எனக்காட்டுபவரையும் கவனியுங்கள். அங்கே இருந்த சிலர் ராஜ்யம் அல்லது சபை, பலத்தோடே வருவதைக் காணும்வரை உயிரோடிருப்பார்கள் என்று சொல்லுவதைக் கவனியுங்கள். எனவே அது சமீபமாயிருந்தது. அதுவரை அது ஸ்தாபிக்கப்படவில்லை; ஆகிலும் சீக்கிரத்தில் அது ஸ்தாபிதம் பெறும் என்று கூறப்பட்டிருந்தது. அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் சபை ஸ்தாபிக்கப்பட்டதை வாசிக்கிறோம். பரிசுத்த ஆவியானவர் பெந்தகோஸ்தே நாளில் வந்திறங்கினார். அதாவது, அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் அல்லது பாஷைகளைப் பேசக்கூடிய வல்லமையையும், அற்புதம் செய்யக்கூடிய வல்லமையையும் பெற்றனர். இப்படியாக மாற்கு 9:1 நிறைவேறியது. ஆகிலும் முழுமையான தீர்மானத்திற்கு வர, பேதுருவே கூறும் போது, "தீர்க்கதிரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது," என்றார் (அப்போஸ்தலர் 2:6). தொடர்ந்து யோவேல் இரண்டாம் அதிகாரத்திலிருந்து, ஆவியானவர் ஊற்றப்படுவதையும், ராஜ்யம் பலத்தோடே வருவதையும் சுட்டிக்காட்டிப் பேசுகிறார்.

அடுத்ததாக, என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பண்ணுவார் எனப்பட்டது. எபிரேயர் 12:28ல் அசைக்கப்படாத ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாக பவுல் குறிப்பிட்டார். அந்த ராஜ்யமாகிய சபை இன்றுவரை நிலைத்திருக்கிறது. என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். இப்படியாக தானியேல் 2:44 நிறைவேறியது.

இறுதியாக ஏசாயா 2:2,3–ம் கூட பெந்தகோஸ்தே நாளில் சபை ஸ்தாபிக்கப்பட்டதில் நிறைவேறியது. இடம்: எருசலேம். ஸ்தாபிக்கப்பட்ட காலம்: கி.பி. 33; ராஜ்யம் அல்லது சபை ஸ்தாபிக்கப்பட்டது. சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்ட போது கீழ்படிந்த

யாவரும் சபையிலே சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் (அப்போஸ்தலர் 2:47). ஆனால் மத்தேயு 16:18–ல் கர்த்தர் என்ன சொன்னார்? அவர் தமது சபையை ஸ்தாபிப்பதாகக் கூறினார். தமது அப்போஸ்தலர்கள் மூலம் அதை செய்தார். மேலும், அது கன்மலையில் கட்டப்பட்டது, கிறிஸ்துவே அந்த கன்மலை, (1 கொரிந்தியர் 3:11)

யோவானோ, பேதுருவோ ஒரு சபையை ஸ்தாபிக்கவில்லை, ஆனால் கிறிஸ்து ஸ்தாபித்தார். ஒருவர் யாருடைய சபையில் அங்கம் வகிக்க வேண்டும்? நிச்சயமாக கிறிஸ்துவின் சபையில். தேவனுடைய அனுமதியில் வேறெந்த சபையும் உரிமை அளிக்கப்படவுமில்லை, ஸ்தாபிக்கப்படவுமில்லை. தம்மைப்பின்பற்றுபவர்களை அவர் ஒரே வழியில் வர வேண்டும் என்று தேடுகிறார். அந்த வழி அவரது ராஜ்யம் தான்.

எத்தனையோ மனித சபைகள் உள்ளன; ஆனால் அவைகள் அனைத்தும் பிரயோஜனமற்றவை. கிறிஸ்துவுக்கு ஒரு சபை மட்டுமே உண்டு. அதன் தலைவர் அவர் மட்டுமே (கொலோசெயர் 1:18). இரட்சகரும் (எபேசியர் 5:23), அஸ்திபாரமும் அவரே (1கொரிந்தியர் 3:11); அது அவருடைய பெயரைத்தரித்துக் கொண்டிருக்கிறது (ரோமர் 16:16). அந்த சபைக்காகத் தான் ஒரு நாளில் வரப்போகிறார் (எபேசியர் 5:27). கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிப்பதை விடுத்து, யாராயிருப்பினும் வேறே சபைகளில் அங்கம் வகிக்க விரும்புவது ஏன்?

ஆனால், ஒருவர் மனித சபைக்கும் கிறிஸ்துவின் சபைக்கும் உள்ள வேறுபாட்டை எப்படி அறிந்துகொள்ளக்கூடும்? இது மிகவும் எளிது. ஒரு சபை எருசலேமில் ஸ்தாபிக்கப்படாதிருந்தால், அது மிகவும் புதிதாய் வந்த சபை. கிறிஸ்துவின் பெயரைத் தரித்துக் கொள்ளாதிருக்குமேயாகில், அது கிறிஸ்துவுக்குரிய சபையல்ல. அதற்கு புதிய ஏற்பாடு மட்டுமே வழிகாட்டியாயிராவிட்டால், அச்சபை கிறிஸ்துவை பின்பற்றும் சபையல்ல.

பவுல் சொல்லுகிறார், ஒரே சரீரமாகிய சபை மட்டுமே உண்டு (எபேசி. 4:4). அதுதான் கிறிஸ்து ஸ்தாபித்த சபை.

# சபையைக் குறித்த விளக்கம்

கர்த்தருடைய சபையைக் குறித்து நாம் பேசும் போதெல்லாம் கேட்கப்படும் கேள்வி, கிறிஸ்துவின் சபை என்றால் என்ன? என்பது தான். அது மிகவும் நல்ல கேள்வி என்பது திண்ணம், வசனரீதியான பதில்களுக்கு தகுதியானது.

எப்படியிருப்பினும், சபை என்றால் என்ன என்று சொல்லுவதற்கு முன், சபை என்றால் எது இல்லை என்பதை சொல்ல ஆரம்பிப்போம். அநேகர் பெரும்பாலும், இல்லாத ஒன்றை இருப்பதாக நினைத்து குழம்பிக் கொண்டுள்ளனர்.

கிறிஸ்துவின் சபையின் தோற்றம் கத்தோலிக்கமுமல்ல, யூதமார்க்கமும் அல்ல, புராட்டஸ்டண்ட்டுமல்ல; அது நாமகரணக் கூட்டமோ அல்லது நாமகரண கூட்டங்களின் அமைப்போ அல்ல. அது ஒரு சமுதாயக் கூடமோ கட்டிடமோ அல்ல. அது ஒரு அரசியலமைப்புமல்ல. அது மனமகிழ்மன்றமுமல்ல. இவைகளில் எந்த ஒன்றுமில்லை; அநேகரும் இன்றைக்கு சபை என்பது இப்படியெல்லாம் இருக்கும் என்று எண்ணிக் கொண்டிருக்கும் போது, இது உங்களுக்கு ஆச்சரியமாயிருக்கக் கூடும். இப்படிப்பட்ட தவறான எண்ணங்களால் அவர்கள் ஏதோ சில கூட்டங்களிலோ அமைப்புகளிலோ அங்கம் வகிக்கும்படி நடத்தப்படுகின்றனர். அவை முற்றிலும் தேவ சித்தத்திற்கு அப்பாற்பட்டது.

ஆனால் யாராவது, "இவைகளில் எதுவுமே சபையல்ல என்றால், எது தான் சபை?" என்று அறிய விரும்பலாம். இதைத் தான் நாம் கண்டுபிடிக்க விரும்புகிறோம். சபை எனும் பதம், திருமறை பயன்படுத்தும் விதத்திலிருந்து "சபை" என்பது "எக்லீஸியா எனும் கிரேக்கப்பதத்தின் மொழியாக்கம் என்பதும், அழைக்கப்பட்டவர்களின் கூட்டம்" என்று பொருள் என்பதையும் அறிந்து கொள்ளலாம். அதாவது இருளின் ராஜ்யத்திலிருந்து, ஒளியின் ராஜ்யத்திற்கென்று அழைக்கப்பட்டவர்களின் தொகுப்பு (கொலேசெயர் 1:13:14). இன்னொரு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்படிந்தவர்களின் கூட்டமைப்புதான் சபை. இப்படியாக தங்களின் கடந்த கால பாவத்திலிருந்து விடுதலை பெற்றவர்கள் இவர்கள் (அப்போஸ்தலர் 2:38; 2:47). திருமறையில் அநேக விளக்கத் தலைப்புகள் சபைக்கு கொடுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, அநேக ஊழியர்களின் தேவையை வலியுறுத்தும் பொருட்டு, சபை திராட்சைத் தோட்டம் என பேசப்படுகிறது. உலக

இராஜ்யங்கள் அனைத்துக்கும் மேலானது, பாதுகாப்பானது என்பதை அடையாளப்படுத்த ஆட்டுமந்தை என்று அழைக்கப்படுகிறது. எப்பொழுதும் அலங்கரிக்கப்பட்ட அழகிய பெண்ணைப்போல், மணவாளனாகிய கிறிஸ்துவின் மறுவருகைக்காக காத்திருக்க வேண்டுமென்பதை வலியுறுத்த கிறிஸ்துவின் மணவாட்டி என்று விளக்கப்படுத்தப்படுகிறது. கர்த்தரே வீட்டைக் கட்டுபவர் எனும் பொருள்பட சபை தேவனுடைய வீடு என்று அழைக்கப்படுகிறது. பிதாவாகிய தேவன் தகப்பனாகவும், கிறிஸ்து சகோதரராகவும், சபையின் அங்கத்தினர்களாகிய நாம் சகோதர, சகோதரிகளாகவும் இருக்கிறோம் என்பதை காட்ட தேவனுடைய வீடு (குடும்பம்) என்று விளக்கப்படுத்தப்படுகிறது. அது கிறிஸ்துவின் சரீரம் என்று சுட்டிக்காட்டப்படுவதன் மூலம், கிறிஸ்து அதன் தலையாகவும், ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனித்தனியே அங்கங்களாகவும் இருப்பதைக் காட்டுகிறது. இதுதான் சபை, ஆம் கிறிஸ்துவின் சபை.

கிறிஸ்துவின் சபை என்றால் என்ன என்பதை சிறப்பாக விளக்கப்படுத்த வேண்டுமானால், பின்வரும் உண்மைகளை தயவு செய்து காணுங்கள்:

1. அது தீர்க்கதரிசனத்தில் பேசப்பட்டது (தானியேல் 2:44)
2. கிறிஸ்துவால் வாக்குத்தத்தம் செய்யப்பட்டது (மத்தேயு 16:18)
3. அது பலத்தோடே வரும் என்று கூறப்பட்டது (யோவேல் 2:28; அப்போஸ்தலர் 1:8)
4. பெந்தகோஸ்தே நாளில் ஸ்தாபிக்கப்பட்டது (அப் 2)
5. ஸ்தாபிக்கப்பட்ட காலம் கி.பி. 33. (அப் 2)
6. இடம் எருசலேம் (லூக்கா 24:48; அப்போஸ்தலர் 2)
7. அது கிறிஸ்துவின் நாமத்தை தரித்துக் கொண்டது (ரோமர் 16:16; 1 கொரிந்தியர் 12)
8. கிறிஸ்துவாகிய கன்மலையின் மேல் கட்டப்பட்டது (மத்தேயு 16:18)
9. அது இரத்தக்கிரயம் செலுத்தி வாங்கப்பட்ட சபை (அப்போஸ்தலர் 20:28)
10. கிறிஸ்துவே இதன் தலை (கொலோசெயர் 1:18)
11. அவரே இரட்சகர் (எபேசியர் 5:23)
12. கீழ்படிகிறவர்கள் சபையிலே சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்; இப்படியாக இரட்சிப்படைகிறோம் (அப்போஸ்தலர் 2:47)
13. அதன் தலையாய ஊழியம் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதும்,

வறுமையில் இருப்போருக்கு உதவுவதும் (மாற்கு 16:15; யாக்கோபு 1:27)
14. வாரத்தின் ஒவ்வொரு முதல்நாளும் தேவனை ஆராதிப்பது (அப்போஸ்தலர் 20:7) அதன் கடமை.
15. தனித்தனிக் கிறிஸ்தவர்களைக் கொண்ட கூட்டமைப்பு (அப்போஸ்தலர் 11:26)
16. அதன் தலைமையகம் பரலோகம் (அப்போஸ்தலர் 1:10–12)
17. அதன் வழிகாட்டி திருமறை (1பேதுரு 4:11; யாக்கோபு 1:25)
18. அதில் மூப்பர்கள், உதவிக்காரர்களைக் கொண்டு ஆளுகை செய்யப்படுகிறது, பிரசங்கியார்கள், போதகர்கள், அங்கத்தினர்கள், ஆகிய அனைவரும் தேவனுடைய வசனத்தை பின்பற்றுகின்றனர். (1தீமோத்தேயு 3: தீத்து 1)
19. அது ஒரு போதும் அழியாது (எபிரேயர் 12:28)
20. இந்த சபைக்காகத் தான்ஒரு நாளிலே கர்த்தர் மறுபடியும் வருவார் (எபேசியர் 5:27)
21. ஒரே ஒரு சரீரமாகிய சபை மட்டுமே (எபிரேயர் 12:28)
22. சபையின் அங்கத்தினர்கள் கிறிஸ்தவர்கள் என்றழைக்கப்படுகின்றனர் (1பேதுரு 4:16)

பூமியிலே கிறிஸ்துவின் சபைதான் மிகபெரிய ஸ்தாபனம். ஊழியத்திற்கு மகத்தான ஸ்தாபனம். மிகபெரிய ஊழியத்தை அது நிறைவேற்றும் பணியைக் கொண்டுள்ளது. நிகரில்லாதது, ஆனால் எளிமையானது. சபையே இரட்சகர் அல்ல, ஆகிலும் இதிலே ஒருவர் அங்கம் வகித்தால் மட்டுமே இரட்சிக்கப்படக்கூடும். ஒரே ஒரு சபைதான் உண்மையான கிறிஸ்துவின் சபை. அநேக அமைப்புகள் இருந்தாலும், ஒரே ஒரு உண்மை சபை மட்டும் உண்டு.

கிறிஸ்துவின் சபை உலகம் முழுவதும் ஸ்தாபிதம் பெறவேண்டும். இருந்தும் பெரும்பான்மையோர் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். சத்தியத்தை மட்டும் பிரசங்கிக்க இச்சபை தேடுவதால் அதிக பிரசித்தமாக தெரிவதில்லை. அவை தீமைகளையும் தவறான பக்திகளையும் எதிர்ப்பதால், அது உபத்திரவத்திற்கு உள்ளாகிறது. ஆகிலும் கிறிஸ்தவர்களே பூமியில் அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், ஏனெனில் இவ்வுலக வாழ்க்கையில் மட்டுமல்ல வரப்போகிற உலகமாகிய நித்திய வாழ்க்கையிலும் இவர்கள் நம்பிக்கையுள்ளவர்களாயிருக்கின்றனர். ஆக இது தான் கிறிஸ்துவின் சபை.

# சபையின் ஆளுகை அமைப்பு

சபையின் ஆளுகை அமைப்பு அல்லது அரசாங்கம் குறித்த சிந்தனைகளைக் கொடாமல், சபைபற்றி படிப்பது மிகவும் இயலாத ஒரு காரியம். நாமகரணக் கூட்டங்களின் ஆளுகை அமைப்பைப் போன்றது தான் சபையின் ஆளுகை அமைப்பு எனும் கருத்தை விடுத்து சபையின் உண்மையான அமைப்பைக் காட்டுவதே இதற்குக் காரணம்.

முதலாவதாக, சபையை கிறிஸ்து ஸ்தாபித்தார் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். ஆகையால், அவரே அதன் ஸ்தாபகர், உரிமையாளர் மற்றும் தலையானவர். பவுல் அவரைக்குறித்து, "அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்" என்று சொல்லுகிறார் (கொலோசெயர் 1:18). ஆதலால் கர்த்தருடைய பிள்ளைகள் பின்பற்ற ஏதுவாக சபைக்கு ஒரு பூமிக்குரிய தலைவரோ, பிரசிடென்டோ, பிஷப்போ அல்லது தலையாய முன்னோடியோ இருந்து வழிநடத்த வேண்டியதில்லை என்பது மிகவும் தெளிவாயிருக்கிறது.

இரண்டாவதாக, கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறபடியாலும், அவர் இப்பொழுது பரலோகத்திலிருக்கிறபடியாலும், சபையின் தலைமையகமும் பரலோகத்தில் தான் இருக்கிறது என்பது இயல்பாக புரிந்துகொள்ளுகிற விஷயமாகும். இன்னொரு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், கிறிஸ்துவின் சபைக்கு பூமியிலே எவ்வித தலைமையகமும் இல்லை. எப்பொழுதும் இருந்ததில்லை, இப்பொழுதும் இல்லை, இனியும் இருக்கப்போவதிலலை.

மூன்றாவதாக, ஒரே சபை மட்டுமே உண்டு; அது அநேக பிராந்திய சபைகளாக அமைவு பெற்றுள்ளது. கிறிஸ்து தமது சபையைக் கட்டுவதாகச் சொன்னார் (மத்தேயு 16:18). அவர் சபையை உலகளாவிய ரீதியில் பேசினார். ஆயினும் அப்போஸ்தலனாகிய பவுல் பின்னதாக, கிறிஸ்துவின் சபையார் (சபைகள்) என்று பேசினார் (ரோமர் 16:16); அதன் மூலம் வித்தியாசப்பட்ட பிராந்திய சபைகளின் கூட்டமைப்பே சபை என்பதைச் சுட்டிக் காட்டினார்.

நான்காவதாக, ஒவ்வொரு பிராந்திய சபையும் சுய ஆளுகை

அமைப்பைக் கொண்டவை. அதாவது அந்தந்த பிராந்திய சபை தன்னில்தானே முழுமை பெற்றதும், வேறொரு பிராந்திய சபையை சார்ந்திருக்க வேண்டியதும் இல்லை என்பது இதன் பொருள். குறிப்பிட்ட சில ஊழியப்பணிகளை ஒரு பிராந்திய சபைக்கு மற்ற பிராந்திய சபைகள் செய்து கொடுத்து ஒத்துழைக்கலாம். ஆனாலும் கட்டாயமில்லை. மற்ற அனைத்து பிராந்திய சபைகளும் வீழ்ந்து போனாலும், சுய ஆளுகை அமைப்பை உடைய ஒவ்வொரு பிராந்திய சபையும் நிலை நிற்க முடியும். இல்லையேல் ஒரு பிராந்திய சபை அவிசுவாசமுள்ளதாக மாறுமேயாகில், அக்காரியம் பிராந்திய சபைகளை பாதிக்கும் ஆபத்தை சந்திக்கும்.

ஐந்தாவதாக, ஒவ்வொரு பிராந்திய சபையும் தங்களின் சொந்த மூப்பர்களை அல்து கண்காணிகளை உடையவர்களாயிருக்கவேண்டும். அவர்கள் சர்வாதிகாரம் பெற்றவர்களாகயால், மந்தை போஷித்து நடத்துவதற்கே (அப்போஸ்தலர் 20:28) புதிய ஏற்பாட்டுச் சபையில் அவர்கள் மூப்பர்கள், கண்காணிகள், மேய்ப்பர்கள், மேற்பார்வையாளர்கள் என்றெல்லாம் அழைக்கப்பட்டனர். அவர்களுக்கு வேண்டிய தகுதியாம்சங்கள் 1தீமோத்தேயு 3, தீத்து 1 ஆகிய அதிகாரங்களில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. ஒரு பிராந்திய சபையில், தகுதிபெற்ற மூப்பர்கள் இல்லவிட்டால், சபையில் உள்ள கிறிஸ்தவர்கள்அவர்கள் இல்லாமலேயே சபையை நடத்தி ஒரு நாளிலே தங்களைத் தகுதியுள்ளவர்களாக்கிக் கொள்ளலாம். சபையின் வெளிப்படையான அலுவல்களைச் செய்யவும் மூப்பர்களாகப் பணியாற்றவும் ஆண்களே தகுதியானவர்கள் என்பதைக் கவனிக்க வேண்டும்.

ஆறாவதாக, ஒவ்வொரு பிராந்திய சபையும் தங்கள் சொந்த உதவிக்காரர்களையுடையவர்களாயிருக்க வேண்டும். அவர் சபையின் மூப்பர்களுக்கு கீழ் ஊழியம் செய்ய வேண்டியவர்கள். மூப்பர்களுக்கு இவைகளைச் செய்ய நேரமில்லாமையால், உதவிக்காரர்களாய், அல்லது ஊழியக்காரர்களாய் காரியங்களை பொறுப்பேற்று செய்ய வேண்டும். மூப்பர்கள் ஆவிக்குரிய காரியங்களையும், உதவிக்காரர்கள் சபையின் சரீரத்திற்குரிய காரியங்களையும் நடப்பிக்க வேண்டியவர்கள் என்பது சிலரது கருத்து; ஆகிலும்

இரண்டுமே தேவையானதுதான். யார் வேண்டுமானாலும் உதவிக்காரர்களாய் பணியாற்றலாம் என்றில்லாமல், அவர்களுக்கும் தகுதியாம்சங்கள் 1தீமோத்தேயு 3–ல் சொல்லப்பட்டுள்ளது.

ஏழாவதாக, சபையின் பிரசங்கியார்களும், சுவிசேஷகர்களும், போதகர்களும், (ஆசிரியர்கள்), சாதாரண கிறிஸ்தவர்களும், இருப்பதைக்காணலாம். இந்த வித்தியாசப்பட்டவர்களைக் குறிப்பிடுவதன் மூலம், அவர்களுக்கென பதவியோ ஸ்தானமோ கொடுக்கப்படாமல், அவர்கள் ஊழியங்களைச் செய்பவர்கள் என்று காட்ட குறிப்பிடப்படுகிறது. சபையின் அங்கத்தினர்கள் தொடர்ந்து முயற்சி செய்து பெற்று அனுபவிக்கும்படி கிறிஸ்துவின் சபை பதவிகளால் நிறைந்ததல்ல, ஆனால் சபையானது இயல்பில் எளிமையானதும், தேவன் திட்டமிட்டபடி அது இயங்கவும் வேண்டியது.

இன்றைய பொதுவான மார்க்க உலகைக் கவனித்தால் பல வித்தியாசப்பட்ட வசன ஆதாரமற்ற ரீதியில் சபை ஆளுகை அமைப்பு அமைந்திருப்பதைக் காணலாம். இப்படிப்பட்ட முறைமைகள் சபையில் குருக்கள் போன்ற பிரிவு, தலைமைகள் – தாழ்ந்தவர்கள் எனும் வித்தியாசங்களுக்கு வித்திடுகின்றன. சபையின் ஆளுகை அமைப்பில் ஒரு புறம் உயர் அந்தஸ்தைப் பெற்றவர்கள், மற்றொருபுறம் அங்கத்துவம் மட்டும் பெற்று கட்டளைகளை நிறைவேற்றுகிற கீழ்நிலையுடையோர் என காணப்படுகின்றனர். கத்தோலிக்கத்தில் போப் என்பவர் தலைவராகவும், அவருக்குக் கீழ் படிப்படியான பதவி–பட்டம் பெற்றவர்களும் காணப்படுகின்றன. புராட்டஸ்டண்டில், பிஷப்புகள், தலைவர்கள், மற்றும் முக்கியஸ்தர்கள் போன்ற அமைப்பைப் பெற்றுள்ளது. இவைகளையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு, சபையின் ஆளுகை அமைப்பிற்கு திருமறை போதிப்பதை மட்டும் எற்றுக்கொள்ள திரும்பி வருவது சிறப்பானதாய் இருக்காதா? மனித முறையான அமைப்பு மூலம், மனிதனே மகிமையடைய உயர்த்தப்படுவான். கர்த்தருடைய வழியிலே மனிதன் எவ்விதப்பதவிகளையும் கொண்டிராமல் கிறிஸ்துவை தலையாகக் கொண்டு, ஆவிக்குரிய எல்லா விஷயங்களிலும் நடக்க வேண்டும். எப்படிச் சொன்னாலும், அவரது வழி சரியான வழி அதுமட்டுமே பரிசோதனை நேரத்தில் நிலை நிற்கும்.

# சபையின் பணிகள்

சபையின் ஊழியப் பணி என்ன? சபையின் ஸ்திரத்தன்மைக்கு நிச்சயமாக சில நோக்கங்கள் உண்டு. அதற்கென செயல்பாடு அல்லது பணி இருக்க வேண்டும். இருக்கிறது. ஆகிலும் வாங்கி விற்று லாபம் சம்பாதிக்கிற வியாபாரப்பணி சபை செய்வதல்ல. பிரசங்கம் பண்ண விரும்புகிறவர்களையெல்லாம் பணியமர்த்தி வெளியில் அனுப்பும் வியாபாரம் செய்வதை உட்படுத்தியிருப்பது சபையின் காரியமல்ல. பெற்றுக்கொள்வதையெல்லாம் மற்றவருக்கு கொடுத்து விடுவதுதான் சபையின் தொழில் அல்ல. நாடு முழுவதும் கல்வி நிறுவனங்களை நிறுவி, நடத்துவது சபையின் பணியல்ல. இப்பொழுது நாம் குறிப்பிட்ட இவைகளெல்லாம் இன்றியமையாததும், கவனம் செலுத்தப்பட வேண்டியதுமாகும்; ஆகிலும் கர்த்தருடைய சரீரத்தின் முதல் கடமை இதுவல்ல. ஆம்! சபைக்கென்று செய்ய வேண்டிய வேலை உண்டு, ஆகிலும் சிலர் நினைப்பது போல எப்போதும் அதனுடைய பணி அதுவல்ல.

உலகம் முழுவதிலும் சபையின் பணிதான் மிகப்பெரிய பணி. அந்தப் பணியைச் செய்ய அதனால் மட்டுமே முடியும்; அதன் விளைவு தேவனை மகிமைப்படுத்துவது. சபைக்கென்று நியமிக்கப்பட்ட கர்த்தருடைய பணி இதுவே; அதை வேறெந்த திட்டத்தின் மூலம் செயல்படுத்தினாலும் அது தேவனுடைய சித்தத்திற்கு முரணானதும், அல்லது செய்யாமல் விடுவது, அவருடைய அனுமதியில் செய்யப்படாதது என்ற முடிவை ஏற்படுத்தும்.

சபையின் பணி உண்மையில் இரண்டு வகைப்படும். **முதலாவதாக** அது சுவிசேஷத்தைப் பிரசங்கித்து ஆத்துமாக்களை இரட்சிப்படையச் செய்வது; **இரண்டாவதாக,** ஏழைகளுக்கும், தேவையுடையோருக்கும் உதவுவது. இந்த பணிகளுக்கு அப்பால் சபை வேறெந்த தொழிலையும் செய்ய கடமைபட்டதல்ல.

சபையின் முதல் கடமையாகிய சுவிசேஷத்தை பிரசங்கிப்பதை கவனம் செலுத்த துவங்குவோம். தமது பிரதான கட்டளையில்

கிறிஸ்து, "நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள், விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்," என்றார் (மாற்கு 16:15,16). மத்தேயு இதே கட்டளையை எழுதி, கர்த்தர் சொல்லுவதாக, "நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானங் கொடுத்து," என்று குறிப்பிடுகிறார் (மத்தேயு 28:19). ஆக போக வேண்டும் என்பதே சபையின் தலையாயக் கடமையாயிருக்கிறது. ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படும்படி, நாம் உலகமெங்கும், உலகிலுள்ள சகல நாடுகளுக்கும், இறுதியாக சகல சிருஷ்டிக்கும் போய் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டும்.

நாம் எப்படி போக வேண்டும் என்று கர்த்தர் சொல்லவில்லை; ஆனால் புறப்பட்டு போங்கள் என்று சொன்னார். சுவிசேஷத்தை இப்படித்தான் பிரசங்கிக் வேண்டும் என்ற முறையை அவர் கூறவில்லை; ஆனால் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படி கூறினார். கவனியுங்கள், நாம் மனிதக் கற்பனைகளையோ, ஆலோசனைகளையோ போதிக்கவேண்டியவர்களல்ல, ஆனால் சுவிசேஷத்தை மட்டும் பிரசங்கிக்க வேண்டும்; நாம் சுவிசேஷத்தை பிரசங்க மேடையிலோ, கைப்பிரதிகள் வாயிலாகவோ, செய்திதாள்கள் மூலமோ, அஞ்சல் வழி பாடங்கள் வாயிலாகவோ , வானொலி மூலமாக, தொலைக்காட்சி வழியாகவோ அல்லது வேறு அநேக வழிகளில் பிரசங்கிக்கலாம். ஆனால் எந்த வழியில் பிரசங்கித்தாலும், சுவிசேஷத்தை அதன் துப்புரவுத் தன்மை மாறாமல் பிரசங்கிக்க வேண்டும். 2தீமோத்தேயு 4:2–ல் பவுல் கூறியது போல, நாம் வசனத்தை பிரசங்கிக்க வேண்டும். எதை பிரசங்கிப்பது? தேவனுடைய வசனத்தை மட்டும்.

சபை செய்கிற ஒவ்வொரு செயலும், செய்யப்படுகிற ஒவ்வொரு

நற்கிரியையும், பிரசங்கிக்கப்படுகிற ஒவ்வொரு பிரசங்கமும், ஆம் அனைத்துமே, ஆத்துமாவை இரட்சிக்க வேண்டும். அதினால் தான் நாம் சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டும். நமது ஆத்துமாக்கள், மற்றவர்களுடைய ஆத்துமாக்களும் இரட்சிக்கப்படுவதற்காக நாம் அப்படி செய்ய வேண்டியவர்கள். மற்றவர்களை இரட்சிப்புக்குள் வழி நடத்தவே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்; இப்படியே ஒவ்வொரு கிறிஸ்தவனும் உணர்வடைய வேண்டும்.

சபையின் பணி இத்துடன் நின்று விடுவதில்லை; உண்மையில் அடுத்த பணியானது முந்தின பணியின் (ஊழியத்தின்) தொடர்ச்சி. தேவையுடையோருக்கு உதவி செய்ய சபை ஒரு கருவியாக இருக்கிறது. கர்த்தர் இந்த பூமியிலிருந்தபோது தேவையுடையோரையும், ஏழைகளையும் குறித்து தொடர்ந்து அக்கரை செலுத்தினார். அதுபோல நாமும் அக்கரை செலுத்தும்படி எதிர்பார்க்கிறார். மற்றவர்களைக் குறித்து அக்கரை காட்டாமலும், அவர்களது தேவைகளை நினையாமலுமிருப்போமாகில், உண்மையில் (உறுதியாக) நாம் கிறிஸ்துவின் ஆவியை உடையவர்களல்ல (ரோமர் 8:9).

மற்றவர்களுக்கு உதவுகின்ற விஷயத்தில் உண்மையிலேயே தேவையுடையவர்களாகவும், தகுதியுடையவர்களாகவும் இருப்பவர்களுக்கே உதவுதல் அவசியம் (1தீமோத்தேயு 5). அப்படியிராவிட்டால், தகுதியற்றவர்களுக்கு ஒருவர் வாழ்நாளெல்லாம் உதவி செய்து கொண்டே இருக்க வேண்டியதாகும். ஏனெனில் சில மக்கள் சபையின் நன்மைகளை அனுகூலமாக்கிக் கொண்டு பெற்றுக் கொள்வதிலேயே நோக்கமாயிருப்பர்.

சபை அதிமாக செய்யலாம். அதவாது, தனக்கு கொடுக்க திராணியிலிருந்து, வருமானம் இருக்கும்வரை மட்டுமே செய்யலாம். ஆயினும் சமயம் வாய்க்கும் போதெல்லாம், பசியுள்ளோருக்கு உணவும், நிர்வாணத்திலும், குளிரிலுமிருப்போருக்கு ஆடைகளும்,

தெருவில் விடப்பட்டவர்களுக்கு உறைவிடமும் கொடுத்து உதவலாம். அப்படிப்பட்ட உதவிகள் வியாதிப்பட்டவர்களுக்கு உபத்திரவப்படுவோர்களுக்கும் அக்கரை காட்டுவதும், வீடற்றவர்களுக்கும், வயதானவர்களுக்கும் கவனம் செலுத்தி பராமரிப்பதையும் உட்படுத்தியது. யாக்கோபு, "திக்கற்ற பிள்ளைகளும், விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறை படாதபடிக்குத் தன்னைக் காத்துக் கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது" என்று சொன்னார் (யாக்கோபு 1:27).

ஒவ்வொரு மனிதனும் தனக்கும் தன் குடும்பத்துக்கும் தேவையானவைகளை ஒழுங்கு செய்வது தேவனுக்கே முன்பாக இருக்கிற முதல் கடமை. பிறகு உதவி கிடைக்குமானால், சபை குறைவுள்ள இடத்தை நிரப்பும் (1 தீமோத்தேயு 5:8). ஒருவன் பசியிலும், குளிரிலும், உலக காரியங்களின் அத்தியாவசியத் தேவைகளில் இருக்கும் போது, ஆவிக்குரிய காரியங்களில் ஆர்வம் காட்ட மாட்டான் என்று யாரோ சொன்னார்கள். இது உறுதியான உண்மை, சபையானது ஏன் இப்படிப்பட்ட உதவி செய்கிற பணிகளைச் செய்யவேண்டும் என்பதற்கு இதுவும் ஒரு காரணம். மாம்ச உடம்புக்கு அக்கரை செலுத்துகிறோம்; ஆகிலும் ஆவிக்குரிய விஷயத்திற்கு அதிகக் கவனம் செலுத்துவது மிகவும் அவசியம்.

